

கரூர் நாடாளுமன்றத் தொகுதியில், தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணியின் சார்பில், காங்கிரஸ் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட ஜோதிமணியை இரண்டாவது முறையாக, மக்களின் பேராதரவோடு வெற்றிபெறச்செய்ய, அயராது உழைத்த, மணப்பாறை சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர், திருச்சி தெற்கு மாவட்ட செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மணப்பாறை துவரங்குறிச்சி பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.



தஞ்சாவூர் மாவட்டம், புதுக்கோட்டை சாலை, திருக்கானூர் பட்டியில் புதிதாக கட்டப்பட உள்ள ஆரம்ப சுகாதார நிலைய இடத்தை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி, மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப், தஞ்சை மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், திரைப்பட நடிகர் துரை, சுதாகர் உள்பட பலர் உடன் இருந்தனர்

### ‘நீட்’ தேர்வு குளறுபடிகளுக்கு கடும் கண்டனம்!

# ‘நீட்’ நுழைவுத் தேர்வை நிரந்தரமாக ரத்து செய்திட வேண்டும்!

## கழக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜூன் 19 –

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (17.06.2024) காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக சட்டத்துறை அலுவலகத்தில் கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன், ஈரோடு ராதா கிருஷ்ணன், கே.எம்.தண்டபாணி, துணைச் செயலாளர்கள் ஜெ.பச்சையப்பன், கே.சந்துரு, வி.வைத்திய லிங்கம், தலைமைக் கழக வழக்கறிஞர்கள் ப.கணேசன், சூர்யா வெற்றி கொண்டான், கே.ஜெ.சரவணன், வீ.கவிகணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:–

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், இந்திய துணைக் கண்டமே வியந்து நோக்கும் வண்ணம் தமிழ்நாட்டில் உள்ள 40 தொகுதிகளிலும் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்கள் அதிக வாக்கு வித்தியாசத்தில் மாபெரும் வெற்றிபெற வியூகம் அமைத்ததோடு, அவ்வெற்றிக்கு பாடுபட்ட தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கும் நாடாளுமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி வாரியாக பிரச்சாரம் செய்து, பாசிச பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை படுதோல்வி அடையச் செய்து, ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்திட, பாடுபட்ட தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும் – விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் தனது மனமார்ந்த பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

**தேர்தல் ஆணையத்திற்கு வலியுறுத்தல்!**

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட EVM இயந்திரங்களின் நம்பகத்தன்மை குறித்து இன்று நாடு முழுவதும் பேசுபொருளாக மாறியிருக்கும் இச்சூழ்நிலையில், இந்திய தேர்தல் ஆணையம் EVM செயல்பாடுகள் குறித்து, பொதுவெளியில் விவாதிக்க வேண்டுமென, இந்திய தேர்தல் ஆணையத்தை இக்கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

‘நீட்’ நுழைவுத் தேர்வை அறிமுகப்படுத்திய போதிலிருந்தே, அது ஏழையெளிய கிராமப்புற மாணவர்களுக்கு எதிரானது என்று அறிக்கைகள், கண்டன ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள், கையெழுத்து இயக்கங்கள் ஆகியவற்றை தொடர்ந்து நடத்தி, அதனை எதிர்த்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் கூற்று மெய்பிக்கும் வகையில், அண்மையில் நடைபெற்ற ‘நீட்’ தேர்வு குளறுபடிகளுக்கு தி.மு.க. வழக்கறிஞர் அணியின் இக்கூட்டம் தனது கண்டனத்தை பதிவு செய்வதோடு, ‘நீட்’ நுழைவுத் தேர்வை நிரந்தரமாக ரத்து செய்திட வேண்டுமென என இக்கூட்டம் பிரதமரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**விக்கிரவாண்டி இடைத்தேர்தல்!**

வருகிற ஜூலை 10ஆம் தேதி அன்று நடைபெற விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தலில், கழக நிர்வாகிகளுக்கு உறுதுணையாக இருப்பதுடன், அவர்களுக்கு தேவைப்படும் அனைத்து சட்ட உதவிகளை வழங்கி, சிறப்பாக செயல்பட தி.மு.க. வழக்கறிஞர் அணியின் நிர்வாகிகளையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தி.மு.க. வழக்கறிஞர் அணியின் செயல்பாடுகளை மேலும் செம்மைப்படுத்திடவும், இதுவரை நடைபெற்ற பணிகள் குறித்து ஆய்வு செய்திடவும், மாவட்ட அமைப்பாளர்களின் கூட்டம் வருகிற ஜூலை 21ஆம் தேதி நடத்துவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**ஆங்கில வழியில் கருத்தரங்கம்!**

அண்மையில் கழக சட்டத்துறைச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் சர் பிட்டி. தியாகராயர் அரங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கம் ஆங்கில வழியில் நடைபெற்றது. இக்கருத்தரங்கை நம்முடைய கழகத் தலைவர் அவர்கள், வெகுவாக பாராட்டியதோடு மட்டுமல்லாமல், இதேபோன்ற கருத்தரங்குகளை தமிழ்நாடு முழுவதும் நடத்திட வேண்டுமென, கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தியதன் அடிப்படையில், மாநிலத்தில் உள்ள ஏழு மண்டலங்களில், தலா ஒரு கருத்தரங்கம் நடத்துவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### இராமநாதபுரம் - மண்டபம் அருகே படகு சேதமடைந்து நீரில் மூழ்கி உயிரிழந்த

# மீனவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 19 -

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் அருகே இயந்திர மீன்பிடி படகு சேதமடைந்ததால் நீரில் மூழ்கி உயிரிழந்த மீனவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவி வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தைச் சேர்ந்த INDTN11MM110 என்ற பதிவெண் கொண்ட இயந்திர மீன்பிடி படகில் கடந்த 15.6.2024 அன்று கடலில் மீன்பிடிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக மீன்பிடி படகு சேதமடைந்து நீரில் மூழ்கியதால், மீன்பிடிக்கச் சென்ற ஐந்து மீனவர்களில் இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் ஊராட்சி, அன்னை நகரைச் சேர்ந்த ஆரோக்கியம் (வயது 50) த/பெ.ஜெபமாலை, பரக்கத்துல்லா (வயது 45) த/பெ. ஜனிசை மற்றும் கலீல் முஹம்மது (வயது 32) த/பெ. செய்யது முஹம்மது புஹாரி ஆகிய மூவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமையில்

# கோவை மேற்கு மண்டல ஆதி திராவிடர் நலக் குழுக் கூட்டம்!

## வி.பி.இராசன் - திப்பம்பட்டி ஆறுசாமி - என்.என்.செந்தில் குமார் சிறப்புரை!

*கோவை, ஜூன் 19 -*

கோவை மேற்கு மண்டல ஆதி திராவிடர் நலக் குழு கூட்டம் சட்டமன்ற உறுப்பினர் மாநில செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது அனைவரையும் மாவட்ட அமைப்பாளர் சென்னை சிவா வரவேற்றார் கூட்டத்தில் மாநில இணைச் செயலாளர்கள் வி.பி.ராஜன் திப்பம்பட்டி ஆறுச்சாமி துணை செயலாளர் பொன் தோஸ் மாரியப்பன் கென்னடி மாவட்டத் துணைச் செயலாளர் எம்.என்.செந்தில்குமார் ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள்.

கூட்டத்தில் மாநகர் மாவட்ட அமைப்பாளர் டெம்போ சிவா, தெற்கு மாவட்ட அமைப்பாளர் கிணத்துக்கிடவு ஞானசேகரன், திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் கன்னிமுத்து, வடக்கு மாவட்ட அமைப்பாளர் பழனிச்சாமி, மாநகர் மாவட்ட அமைப்பாளர் துரைசாமி உள்ளிட்ட மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஒன்று தமிழகத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கும் 40 இடங்களை வென்றெடுத்த தமிழக முதல்வர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கும் மாநில இளைஞர் அணி செயலாளர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வது எனவும்,

நடைபெற உள்ள விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் நமது அணியின் சார்பில் கிளை வாரியாக தேர்தல் பணிக்குழு அமைத்து கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு பாடுபடுவது எனவும் நகர ஒன்றிய பேரூர் கழகங்களுக்கு தலைமைக் கழகத்தின் அனுமதி பெற்று அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமனம் செய்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் இக்கூட்டத்தில் கோவை பொள்ளாச்சி நீலகிரி திருப்பூர் ஆகிய நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்ட கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு பணியாற்றிய நலக்குழு நிர்வாகிகளுக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

### கரூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றிக்கு - உழைத்த

# மணப்பாறை சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளுக்கு பாராட்டு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்று வாழ்த்து!

*மணப்பாறை, ஜூன் 19 -*

கரூர் நாடாளுமன்ற தொகுதியில், தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணியின் சார்பில், காங்கிரஸ் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட ஜோதிமணி அவர்களை இரண்டாவது முறையாக, மக்களின் பேராதரவோடு வெற்றிபெறச் செய்ய, அரும்பாடுபட்டு, அயராது உழைத்த, மணப்பாறை சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர், திமுகவின் தெற்கு மாவட்ட செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தலைமையில் மணப்பாறை துவரங்குறிச்சி பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் சேகரன் மாவட்ட கழக நிர்வாகிகள் கோவிந்தராஜ், குணசேகரன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் ராமசாமி செல்வராஜ், சின்னடைக்கன், ஸ்ரீரங்கன், ராஜேந்திரன், பழனியண்டி, நகரக் கழகச் செயலாளர் மு.மா செல்வம் பேரூர் கழகச் செயலாளர் நாகராஜ் சேர்மன் அமிர்தவல்லி குணசீலன் சரண்யா மற்றும் இந்திய கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்த னர்.

கூட்டத்தில் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களின் உரை: ஒரு வருடத்திற்கு முன்பே இப்பொழுது கூட்டம் நடைபெறுகிற இதே இடத்தில் முன்னாள் சபாநாயகர் ஆவுடையப்பன் அவர்களை வைத்து பாராளுமன்றத் தேர்தலுக்கான ஆயத்த கூட்டத்தை நடத்தினோம். அதன் தொடர்ச்சியாக தான் நாம் இன்று சகோதரி ஜோதி மணியை வைத்து பாராளுமன்றத் தேர்தலின் வெற்றி கூட்டத்தை இப்பொழுது நடத்திக் கொண்டிருக்கிறோம்.

நம் முதல்வருக்கு 40க்கு 40 என்கின்ற வெற்றியை விட வேறு எந்த பரிசையும் அவருக்கு நாம் அளித்து விட முடியாது. மக்கள் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய பெண்கள், அவர்களுக்கும் குடும்பம் என்கின்றது இருக்கின்றது அதை ஒதுக்கி வைத்து விட்டு தான் பொது வாழ்க்கைக்கு வருகின்றனர்.

எனவே நாம் அவர்களை தலைவணங்கி ஏற்றுக் கொள்ள வேண்டும். மக்கள் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய நாங்கள் சட்டமன்றம் பாராளுமன்றத்தில் வரக்கூடிய விவாதங்களில் கலந்து கொண்டு மக்களுக்கு தேவையான கருத்துக்களை எடுத்து வைக்கக்கூடியவர்களாக இருக்கின்றோம், உள்ளாட்சி அமைப்புகள் என்று வருகின்ற போது மக்களுடைய அடிப்படை தேவைகளை நிறைவேற்றக் கூடிய வர்க ளாக இருக்கின்றார்கள். அந்தப் பணி நிறைவேற நாங்கள் உறுதுணையாக இருப்போம்

ஒட்டு மொத்த இந்தியாவிற்கும் பாராளுமன்ற உறுப்பினருக்கென்ற நிதியை உருவாக்குவதற்கு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான் வழிகாட்டியாக இருந்திருக்கின்றார் முதல் முதலாக சட்டமன்ற உறுப்பினருக்கென்ற நிதி ரூபாய் 17 லட்சத்தை ஒதுக்கி சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து மக்களின் பணிகளை செய்வதற்கு உறுதுணையாக இருந்திரு க்கின்றார்.

ஏற்கனவே வெற்றி பெற்ற ஒரு வேட்பாளரை வெற்றி பெற வைத்தால் என்ன நன்மை என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும், வாக்களிப்பது என்பது ஒரு விளையாட்டான காரியம் அல்ல நாடாளுமன்றத்தில் நடைபெறுகின்ற விவாதங்களில் கலந்து கொண்டு பேசுகிற ஒருவரை நாம் வெற்றி பெறச் செய்திருக்கின்றோம்.

கடந்த முறை பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற ஒருவரை மறுபடியும் தேர்வு செய்வதால் அவருக்கு அதிகம் அவை விவாதங்களில் கலந்து கொண்ட அனுபவம் இருக்கும்.

இவ் வெற்றிக்கு வித்திட்ட சிறுபான்மை இன மக்கள் மற்றும் ஆதிதிராவிட மக்கள் அனைவருக்கும் எங்களது நன்றியை உரித்தாக்குகின்றோம்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் ஜோதி மணி நன்றி தெரிவித்து பேசினார்.

### திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்

# மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல்

# தேர்தல் முடிவு

## தலைமைக் கழக அறிவிப்பு

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட த.வேணுகோபால் அவர்கள் மறைவெய்திய காரணத்தால்; திருவண்ணாமலை தெற்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, ஜூன் 17 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். “ என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

திருவண்ணாமலை தெற்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கு கோ.கண்ணன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**திருவண்ணாமலை தெற்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவராக,**

**திரு. கோ.கண்ணன்,** தேவனூர் & அஞ்சல்,

திருவண்ணாமலை வட்டம் திருவண்ணாமலை மாவட்டம்-606 811

அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.06.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



உதகை நகரக் கழக தி.மு.க. சார்பில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று முதன் முதலாக உதகைக்கு வருகை தந்த ஆ.இராசா அவர்களுக்கு உதகை கேரிங்கிராஸ் பகுதியில் உதகை நகரக் கழகச் செயலாளர் ஜார்ஜ் தலைமையில் மிகச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சியில் அமைச்சர் க.இராமச்சந்திரன், மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக், மாவட்ட துணைச் செயலாளர் ஜெ.ரவிக்குமார், நாசர் அலி,கார்டன் கிருஷ்ணன், ஜெயகோபி, மஞ்சு குமார், வெங்கடேஷ், புஷ்பராஜ், ரவீந்திரன், செல்வராஜ், சீதா,நாகமணி, மேரிபுளோரினா, ரீட்டாமேரி, வனித்தா, பிரியா, ரவி, ரகுபதி, கமலக்கண்ணன், தேவா, சுரேஷ், ஹென்றி,ஜேம்ஸ், மகேஷ், பாபு, சிவா, ரங்கநாதன், நிக்லோஸ், உமேஷ், கிருஷ்ணன், பாலமுருகன், காந்தன்,சம்பத், அமுல்ராஜ், மணிகண்டன், கண்ணன், கணேஷ், பிருந்தா, கண்ணகி, பிரேமா, ஷைலா, சாந்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே சீயமங்கலம் கிராமத்தில் இருந்து புதிய அரசு பேருந்து வழித்தடத்தை வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர்,தமிழ்நாடு கால்நடை ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. கொடி அசைத்து துவக்கி வைத்தார், அருகில் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக நிர்வாகிகள் பலர் உடன் உள்ளனர்.